# INTERNATIONAL INDIAN SCHOOL – DAMMAM

## TERM -1 WORK SHEET (2017-18)

## CLASS – VII – TAMIL

## தமிழ்

## பகுதி – 1

**அ. கொடுக்கப்பட்ட பத்தியைப் படித்துக் கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை தருக.**

ஆசிரியராக இருந்து குடியரசுத் தலைவராக உயர்ந்தவர் , 'தத்துவ மேதை' எனப் புகழப்படுபவர் ; தம் பிறந்தநாளை 'ஆசிரியர் தின' மாகக் கொண்டாட விரும்பியவர் டாக்டர் இராதாகிருஷ்ணன் ஆவார். இவர் 1888 ஆம் ஆண்டு செப்டம்பர் 5 அம் நாள் திருத்தணியில் பிறந்தார். இவரது தந்தையார் திரு. வீராசாமி ; தாயார் திருமதி சீதம்மாள். இவர்தம் தொடக்கக் கல்வியை திருத்தணியிலும் திருப்பதியிலும் கற்றார். தம் உயர்கல்வியை வேலூரிலும் சென்னையிலும் கற்றுத் தேர்ந்தார். இராதாகிருஷ்ணன் சென்னை மாநிலக் கல்லூரியில் துணைப் பேராசிரியராகத் தம் பணியைத் தொடங்கினார். அதே கல்லூரியில் தத்துவப் பேராசிரியரானார். தம்முடைய கனிவான தோற்றத்தாலும் , கற்பித்தல் திறத்தாலும் மாணவர் உள்ளங்களை கொள்ளை கொண்டார். பின்னர் மைசூர் பல்கலைக்கழகத்தில் தத்துவப் பேராசிரியரானார்.

வினாக்கள் :-

1. இராதாகிருஷ்ணன் எங்கு , எப்போது பிறந்தார் ?

2. இராதாகிருஷ்ணனின் பெற்றோர் யாவர் ?

3. இராதாகிருஷ்ணனின் கல்வியைப் பற்றி எழுதுக.

4. இவர் மாணவர்கள் உள்ளத்தை கொள்ளைக் கொண்டது எவ்வாறு ?

5. இவரது பிறந்தநாள் எந்நாளாகக் கொண்டாடப்படுகிறது ? இவர் எப்படி புகழப்படுகிறார் ?

**ஆ. கடிதம் எழுதுக :-**

**விடுதியில் தங்கியிருக்கும் நீ , கல்விச் சுற்றுலா செல்ல அனுமதி வேண்டி தந்தைக்குக் கடிதம் எழுதுக.**

**இ. கட்டுரை எழுதுக :-**

தொலைக்காட்சியின் நன்மைகள் , தீமைகள் எனும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

## பகுதி -2

**இலக்கணம் :-**

**அ.சான்று தருக :-**

1.செய்மைச்சுட்டு

2.புறவினா

3.புறச்சுட்டு

4.சுட்டுத்திரிபு

5.நேரிணைச்சொற்கள்

6.செறிவிணைச்சொற்கள்

7.இனமுள்ள அடைமொழி

**ஆ.நிரப்புக :-**

1.தற்போது வழக்கில் இல்லாத சுட்டெழுத்து ______________

2.அ,இ என்னும் சுட்டெழுத்துகள் அந்த இந்த என திரிந்து வந்தால் அவை __________ ஆகும்.

3.சொல்லின் இறுதியில் வரும் வினா எழுத்துகள் ______________

4.வினா எழுத்துகள் __________ , __________ என இருவகைப்படும்.

5.இணைச்சொற்கள் ______________ வகைப்படும்

6.பச்சைப்பசேல் என்பது ________________ இணைச்சொல்

7.செங்காகம் என்பது ______________ அடைமொழி

8.சொல்லின முதலிலும் முடிவிலும் வரும் வினா எழுத்து ____________

**இ.அடைப்புக்குள் கூறியவாறு செய்க :-**

1. அவனோ ( வினா எழுத்தை எடுத்து எழுதுக)

2. மயில் (அண்மைச்சுட்டில் எழுதுக)

3. எப்பையன் ? (எவ்வகை வினா என எழுதுக)

4. பெண் (புறச்சுட்டில் எழுதுக)

5. இன்பதுன்பம் (எவ்வகை இணைச்சொல்?)

6. வெண்ணிலா (எவ்வகை அடைமொழி ?)

**ஈ. இலக்கணக்குறிப்பு எழுதுக :-**

1. எக்கோழி

2. இந்த மலை

3. யாங்ஙனம் ?

4. கார்த்திகை விளக்கு

5. செந்தாமரை

6. மேடுபள்ளம்

7. செக்கச்சிவந்த

**உ. சரியானதைத் தேர்ந்தெடுக்க :-**

1. அ. சீரும் சிறப்பும் என்பது – செறிவிணைச்சொல்

ஆ. சீரும் சிறப்பும் என்பது – எதிரிணைச்சொல்

இ. சீரும் சிறப்பும் என்பது – நேரிணைச்சொல்

2. அ. தற்போது வழக்கில் இல்லாத சுட்டெழுத்து 'அ'

ஆ. தற்போது வழக்கில் இல்லாத சுட்டெழுத்து 'இ'

இ. தற்போது வழக்கில் இல்லாத சுட்டெழுத்து 'உ'

3.அ.சொல்லின் முடிவில் வரும் வினா எழுத்துகள் - எ,ஏ,யா

ஆ.சொல்லின் முடிவில் வரும் வினா எழுத்துகள் - ஆ,ஏ,ஓ

இ.சொல்லின் முடிவில் வரும் வினா எழுத்துகள் - ஏ,யா,ஆ

## பகுதி –3

**அ.பொருள் கூறுக :-**

நெடிதுயர்ந்த - சாயப்பட்டறை - வேதிக்கழிவு -

மலைமுகடு - நீர்வேட்கை - விசும்பு -

அரிது - ஒழுக்கு - வைலும் -

மோப்ப - திரிந்து - குழையும் -

நுணங்கிய - ஆன்ற - வானின்று -

**ஆ.பிரித்து எழுதுக :-**

கருங்கோடு - நீரோடை - உடலெல்லாம் -

உலகெனின் - வாயினராதல் - முகந்திரிந்து -

**இ.எதிர்ச்சொல் எழுதுக :-**

அரிது நிறைந்த முகந்திரிந்து

நல்லவை பெருமை

**ஈ.நிரப்புக :-**

1.சாயப் பட்டறைகளிலிருந்து ________________ நீரில் கலக்கின்றன.

2.வண்டுகள் ________________ எழுப்பும்.

3.மலைமுகடுகளில் ________________ கூட்டங்கள் தவழ்கின்றன.

4.திருக்குறளை இயற்றியவர் ________________

5.முகர்ந்துப் பார்த்தாலே வாடும் மலர் ________________

6.மழைபெற ____________ அவசியம்.

<u>உ.பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக :-</u>

1.அருவி என்பதன் பொருள் ________________

அ.வாய்க்கால் ஆ.ஆறு இ.மலையின் வீழ்நீர்

2.தணித்தல் என்பதன் பொருள் ____________

அ.அதிகமாக்கல் ஆ.குறைத்தல் இ.உயர்த்தல்

3.நல்லனவற்றைக் கேட்பதனால் கிடைப்பது ______________

அ.கயமை ஆ.பெருமை இ.சிறுமை

4.விசும்பு என்பதைக் குறிக்கும் சொல் _____________

அ.வான் ஆ.நிலம் இ.காற்று

<u>ஊ.வேறுபாடு அறிக :-</u>

| | | | |
|---|---|---|---|
| அ.கலை - | ஆ.தலை - | இ.ஒளி - | ஈ.அலகு - |
| களை - | தளை - | ஒழி - | அழகு |

<u>எ.பிழை நீக்கி எழுதுக :-</u>

அதிகாளையில் கோலி கூவும். கதிரவண் உதயமாகும்பொலுது நாம் கன் விளிக்க வேண்டும். அதுவே மிகச் சறந்த பலக்கமாகும்.

## <u>பகுதி -4</u>

<u>அ.கொடுக்கப்பட்ட பத்தியைப் படித்து கேட்கப்பட்ட கேள்விகளுக்கு விடையளி :-</u>

மீண்டும் விண்ணில் பறந்தேன். கீழே பார்த்தேன். ஆறு ஓடிக்கொண்டிருந்தது. ஆனால் அது சாக்கடையாகக் காட்சியளித்தது. தொழிற்சாலைகளின் வேதிக்கழிவுகள் , சாயப்பட்டறைகளின் கழிவுகள் போன்றவை ஆற்றில் கலந்து கொண்டிருந்தன. இந்த நீரை மனிதர்கள் குடித்தால் சிறுநீரகக் கோளாறுகள் , மஞ்சள் காமாலை , காய்ச்சல் , வாந்தி, பேதி முதலிய நோய்கள் ஏற்படுமே!

<u>வினாக்கள் :-</u>

1. கீழே ________________ ஓடிக்கொண்டிருந்தது.

2. கழிவுகள் கலந்த நீரைக் குடிப்பதால் __________ , ___________ , __________ ஏற்படுகிறது.

3. பொருள் எழுதுக

அ. சாயப்பட்டறை ஆ. விண்

4. பிரித்து எழுது :-

அ. தொழிற்சாலை ஆ. வேதிக்கழிவு

<u>ஆ. குறுகிய விடையளி :-</u>

1. மங்கை மனம் வருந்தக் காரணம் என்ன ?

2. மழை பெய்யாவிடில் ஒழுக்கம் கெடும் - எவ்வாறு ?

3. விருந்தினர் எப்போது , எப்படி வாடுவர் ?

4. துன்பத்தால் வருந்திக் கெடாதவர் யார் ?

5. தொழிற்சாலைகள் வெளியிடும் புகையால் ஏற்படும் பாதிப்புகள் யாவை ?

<u>இ. விரிவான விடையளி :-</u>

மங்கை கண்ட இயற்கை வளம் பற்றி எழுதுக.

<u>ஈ. அடிமாறாமல் எழுதுக :-</u>

1. 'விசும்பின்' , 'நுணங்கிய' எனத் தொடங்கும் குறட்பாக்களை எழுதுக.

2. 'ஒழுக்கு' , 'விருந்து' என முடியும் குறட்பாக்களை எழுதுக.

<u>உ. துணைப்பாடக்கட்டுரை எழுதுக :-</u>

வெற்றியின் முதற்படி